# NSW HEALTH

## COVID-19 Key Points - Monday 2 August 2021

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணிநேரத்தில், 207 புதிய கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றுக்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் பதிவாகியுள்ளன.
- ஏராளமான நோய்த்தொற்றாளர்களை நாங்கள் தொடந்தும் சமூகத்தில் பார்க்கிறோம். இது, வேலையிடங்கள் மற்றும் வீடுகளில் பெருமளவான தொற்றுப்பரிமாற்ற வீதங்களிற்கு வழிவகுக்கிறது.
- பொதிச் சரக்கு நிறுவனங்கள், அத்துடன் இறைச்சித் தொழிற்சாலைகள் போன்ற உணவைக் கையாளும் வேலைத்தளங்கள் ஆகியவையே குறிப்பாக கவலைக்கிடமான வேலையிடங்களாக இருக்கின்றன.
- சமூகத்தில் சுற்றித்திரியும் 20, 30 மற்றும் 40 ஆகிய இளம் வயதுப்பிரிவினரே நோய்க்கிருமியைப் பெறுகிறார்கள் மற்றும் நோய்க்கிருமியைப் பரப்புகிறார்கள்.
- குழந்தைப் பராமரிப்பு மையங்கள், புதிய கவலைக்குரிய இடங்களாக மாறி வருகின்றன. தயவுசெய்து மிக அவசியமாக இருந்தால் மட்டுமே உங்கள் குழந்தைகளை குழந்தைப் பராமரிப்பிற்கு அனுப்புங்கள்.
- நாம் அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ளும் மாதமாக, ஆகஸ்ட் மாதத்தை நாங்கள் உருவாக்கவேண்டியுள்ளது.
- மக்கள்தொகையில் அதிக சதவீதமானோர் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத பட்சத்தில், எங்களால் டெல்டா திரிபு நோய்க்கிருமியுடன் வாழ முடியாது.
- 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய எவரும், தங்களுக்குக் கிடைக்கும் ஏதாவதொரு தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள ஒரு சந்திப்பை கூடிய விரைவில் முன்பதிவு செய்யவேண்டும்.

Translated By WSLHD Translation Service, 2 August 2021
Tamil